கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் சிதம்பரம்

**அசல் வழக்கு எண்.332/2008**

The Oaths Act 1969 (Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 09.01.2024 நாளாகிய இன்று கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி திருமதி.S.Suganiya Sri, B.A.B.L., (Hons),M.L.,PGDAML. அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 09.01.2024 | சாட்சி | பி.வா.சா.1 |
| பெயர் | நாராயண ஞானதேசிக சுவாமிகள் | வயது.. | 65 |
| தந்தை பெயர்.. | நாராயணன் | கிராமம்.. | கோவிலூர் மடம், சிவகங்கை மாவட்டம் |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை..**

1. கோவிலூர் மடத்திற்கு 26.01.2023 ல் இருந்து நான் சன்னிதானம் ஆக இருந்து வருகிறேன். கோவிலூர் மடம் எப்போது ஆரம்பிக்கப்பட்டது என்றால் 218 வருடங்களுக்கு முன்பு. மடத்தை சார்ந்த சொத்துக்கள் மடத்திற்கு எப்படி கிடைத்தது என்றால் வேவ்வேறு மக்கள் தானமாக கொடுத்த சொத்து. மடத்திற்கு சுமாராக எவ்வளவு நிலங்கள் உள்ளது என்றால் நஞ்சை சுமார் 60 -70 ஏக்கர், புஞ்சை சுமார் 200-300 ஏக்கர் உள்ளளது, கோவிலூர் மடத்திற்கு கீழ் சுமார் 13 மடங்கள் உள்ளது என்றால் சரிதான். சிதம்பரம் பொன்னம்பல சுவாமிகள் மடமும் கோவிலூர் மடத்திற்கு கீழ் செயல்பட்டு வருகிறது என்றால் சரிதான்.

2. பொன்னம்பல சுவாமிகள் மடத்திற்கு எவ்வளவு நிலங்கள் உள்ளது என்றால் சுமார் 60 ஏக்கர் நிலம் உள்ளது. அந்த 60 ஏக்கர் நிலம் எந்த எந்த கிராமத்தில் உள்ளது என்று தெரியுமா என்றால் தெரியாது. இந்த நிலங்கள் இல்லாமல் வேறு எதும் சொத்துக்கள் பொன்னம்பல சுவாமிகள் மடத்திற்கு உள்ளதா என்றால் ஒரு கல்யாண மண்டபம் மற்றும் வீடுகள் வாடகைக்கு விடப்பட்டுள்ளது. கோவிலூர் மடத்திற்கு கீழ் செயல்பட்டு வரும் 13 மடங்களையும் யார் நிர்வகித்து வருகிறார்கள் என்றால் அந்த அந்த மடத்திற்கும் தனி தனியாக மேனாஜர் உள்ளார்கள்.

3. எவ்வளவு ஆண்டுகள் கோவிலூர் மடத்திற்கு தொடர்பு உள்ளது என்றால் 1997 முதல் கோவிலூர் மடத்திற்கு வரவு செலவு கணக்குகளை பார்த்து அதனை கணிணியில் பதிவேற்றம் செய்து வரும் வேலையை செய்து வந்தேன். என்னுடைய கல்வி தகுதி என்னவென்றால் B.com முடித்துவிட்டு CA inter தேர்வு வரை முடித்துள்ளேன். ஆடிட்டிங் சம்மந்தமாக எனக்கு தனியாக அலுவலகம் இருந்ததா என்றால் காரைக்குடியில்

இருந்தது. கோவிலூர் மடத்திற்கு அலுவல் சம்மந்தமாக சென்று வந்தேன். 2000 ம் ஆண்டில் இருந்து நான் கோவிலூர் மடத்தில் அறங்காவளர் ஆக இருந்து வருகிறேன். பொருவாக கோவிலூர் மடத்திற்கு எத்தனை பேர் அறங்காவளராக செயல் பட்டு வருகிறார்கள் என்றால் 5 பேர். அறங்காவளர்களை மடாதிபதி தான் நியமனம் செய்வார் என்றால் சரிதான்.

4. தற்போது உள்ள 5 அறங்காவளர்கள் யார் என்றால் 1.ஆடிட்டர் சிவசுப்பிரமணியன், 2. கண்ணப்பசெட்டியார் 3. ஏ.ராமநாதன் மற்றும் நான் மொத்தம் 4 பேர். எங்களுடைய மடத்திற்கு Trust Deed உள்ளதா என்றால் உள்ளது. அந்த Trust deed எப்போது எழுதப்பட்டது என்றால் தோராயமாக 1997 க்கு பிறகு, அதற்கு முன்பாக informal ஆக ஆண்டவர் மன்றம் என்ற ஒரு அமைப்பு இருந்தது. ஆண்டவர் மன்றத்தின் பணி என்ன என்றால் மடாதிபதிக்கு நிர்வாகம் சம்மந்தமாக ஆலோசனை கொடுப்பது. அறங்காவளர் ஆலோசனை மீறி மடாதிபதி முடிவு செய்வதற்கு உரிமை உண்டு என்றால் ஆண்டவர் மன்றம் இருந்த போது அப்படி இருந்திருக்கலாம் ஆனால் Trust deed ஏற்படுத்திக்கொண்ட காலத்திற்கு பிறகு அவ்வாறு இல்லை.

5. Trust deed ல் எத்தனை அறங்காவளர்கள் இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளது என்றால மடாதிபதியும் சேர்த்து மூன்று பேர் இருக்க வேண்டும் என்று உள்ளது. மற்ற அறங்காவளர்கள் ஆலோசனை வழங்கினால் அதனை முடிவு செய்யவேண்டியது மடாதிபதி தான் என்றால் இல்லை. பெரும்பாண்மையான முடிவுகள் பொருத்து மடாதிபதி தீர்மானம் செய்வாரா என்றால் இல்லை, Trust deed ல் பெரும்பாண்மை சம்மந்தமாக எந்த ஒரு குறிப்பும் இல்லை. அறங்கவாளர் குழு எப்போது கூட்டப்படும் என்றால் மூன்று மாதத்திற்கு 1 முறை. நான் மடாதிபதியாக பொறுப்பேற்ற பிறகு அறங்காளவர்களை வைத்து கூட்டம் நடத்தி உள்ளேனா என்றால் நடத்தியுள்ளேன்.

6. அறங்காளவர்கள் குழுவை அறிவிப்பு மூலம் கூட்டத்திற்கு அழைப்போமா என்றால் இல்லை, தொலைபேசி மூலம் அழைப்போம், அதன் பிறகு தீர்மானத்தை குறித்து தனியாக எழுதி வைப்போம். தீர்மானம் குறித்த புத்தகம் தனியாக இல்லை, தனி தனி தாளில் தான் கோப்பு போட்டு பராமரித்து வருவோம். சாதாரணமாக தீர்மான புத்தம் பராமரிப்பது தான் வழக்கம் என்றால் இருக்கலாம், நாங்கள் அவ்வாறு எழுதவில்லை. நான் நடத்திய அறங்காவளர்கள் குழு கூட்டத்தில் தீர்மானம் ஏதேனும் போடப்பட்டதா என்றால் கும்பாபிஷேகம் சம்மந்தமாக ஏற்றப்பட்டது.

7. நான் மடாதிபதியாக பொறுப்பு ஏற்பதற்கு முன்பு மடத்திற்கு சொந்தமான சொத்துக்கள் விற்கப்பட்டுள்ளதா என்றால விற்கப்பட்டுள்ளது. சொத்து விற்பது சம்மந்தமான தீர்மானங்கள் ஏற்பட்டதா என்றால் சுமார் 2000-2001ல் நாச்சியப்ப சுவாமிகள் இருந்த காலகட்டத்தில் தீர்மானம் போடப்பட்டது, ஆனால் அந்த சொத்து

விற்கப்படவில்லை. இந்த சொத்து இல்லாமல் வேறு சொத்துக்கள் விற்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. 1997 க்கு முன்பாக சொத்தகள் விற்கப்பட்டதன் விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பொன்னம்பல சுமாமி மடம் சிதம்பரத்தில் மன்னார்குடி தெருவில் உள்ளது என்றால் சரிதான்.

8. மன்னார்குடி தெருவில் உள்ள மடமும் கல்யாண மண்டபமும் ஒரே கட்டிடத்தில் உள்ளதா என்றால் ஒரே வளாகத்தில் உள்ளது. கல்யாண மண்டபத்திற்கு கீழ்புரத்தில் தான் மடம் உள்ளதா என்றால் எனக்கு தெரியாது ஒரே வளாகத்தில் தான் உள்ளது. வழக்கு சொத்து மடத்திற்கு பின்புரம் உள்ளதா என்றால் கல்யாண மண்டபத்திற்கு பின்புரம் உள்ளது. வழக்கு சொத்திற்கு தென்புரத்தில் என்ன உள்ளது என்றால் தெரியாது. வழக்கு சொத்திற்கு கீழ்புரதில் யார் சொத்து உள்ளது என்றால் தெரியாது. வழக்கு சொத்தில் இருந்து நேரடியாக மன்னார்குடி தெருவிற்கு போக முடியாது என்றால் காம்பவுன்ட் சுவரை எடுத்து விட்டார் மடத்தின் வழியாக போகலாம்.

9. கல்யாண மண்டபம் அமைந்துள்ள இடத்தில் முழு பரப்பளவிற்கும் கட்டிடம் உள்ளது மற்றம் எந்த சந்தும் இல்லை என்றால் சரிதான். பிராதில் சொத்து விவரத்தை பற்று குறிப்பிடும் போது TS No.904,906,907,908,910 மற்றும் 911 இந்த TS No. களின் உள்ள வீடுகளின் தோட்டத்திற்கு தெற்கு என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கின் எதிர் வழக்குரையில் உள்ள விவரங்களை நான் வழக்கறிஞரிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். மடத்தின் சார்பாக இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையை நான் படித்து பார்த்தேன். வழக்கு சொத்தின் விவரத்தையும் வீடுகளின் தோட்டத்திற்கு தெற்கு என்று உள்ளது பற்றி மடத்தின் சார்பாக தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் ஆட்சேபணை தெரிவிக்கவில்லை என்றால் சரிதான்.

10. நான் மடாதிபதியாக வருவதற்கு முன்பு பொன்னம்பல சுவாமி மடத்திற்கு நிர்வாகம் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. நான் மடாதிபதியாக பொறுப்பேற்ற பின்பு தான் பொன்னம்பல சுவாமி மடத்திற்கு நிர்வாகம் பார்த்து வருகிறேன் என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்து மடத்திற்கு எப்படி பாத்தியம் என்றால் அது பழமையான கோப்பு என்பதால் எனக்கு தெரியாது. வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை தெரிந்துக்கொண்டேனா என்றால் படித்து பார்த்து தெரிந்துக்கொண்டேன். வா.சா.ஆ.12 ஆவணத்தின் படி வழக்கு சொத்தானது 06.06.1883 -ல் வீரப்ப முதலியார், துரைசாமி முதலியார் ஆகியோரிடம் இருந்து மடம் வாங்கியுள்ளது என்றால் பத்திரத்தில் அவ்வாறு தான் உள்ளது என்றால் அதுதான்.

11. வா.சா.ஆ.12 ஆவணத்தின் சொத்து விவரத்தில் நிலம் என்று

காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் அந்த காலகட்டத்தில் அவ்வாறு தான் எழுதுவார்கள். வா.சா.ஆ.12 ஆவணத்தில் சொத்து விவரத்தில் கீழ்மேல் 86 அடி தென்வடல் 182 அடி என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். அதில் வழக்கு சொத்திற்கு வடபுரம் சபாபதி, சட்டையர், வேலாயுதம் மற்றும் கோவிந்த நாயக்கர் தோட்டம் என்று உள்ளது என்றால் ஆவணத்தில் அவ்வாறு தான் உள்ளது. வழக்கு சொத்திற்கு கீழ்புரம் திங்கட்கிழமை மடம், மட தோட்டம் என்று உள்ளது என்றால் ஆவணத்தில் அவ்வாறு தான் உள்ளது. வழக்கு சொத்து மொத்தம் பரப்பளவு எவ்வளவு என்றால் சுமார் 30,000 சதுரடி.

12. வா.சா.ஆ.12 ஆவணத்தின் படி மடத்தின் பரப்பளவு 15,652 சதுரடி என்று உள்ளது என்றால் அது சம்மந்தமான ஆவணத்தை நான் பார்த்தது இல்லை என்னை பொருத்தவரை 30,000 சதுரடி. வா.சா.ஆ.12 கிரய பத்திரத்தை நான் படித்து பார்த்தேனா என்றால் இல்லை. வாதி தரப்பு தாக்கல் செய்த ஆவணங்களை எந்த எந்த ஆவணம் படித்துப் பார்த்துள்ளேன் என்றால் எந்த ஆவணமும் படித்துப்பார்க்கவில்லை. இல்லறத்தில் இருந்தவர்கள் தான் பின்னர் துரவரம் பூன்டு மடாதிபதியாக உள்ளார்கள் என்றால் சரிதான். துரவரத்திற்கு பின்பு மடாதிபதி அவர்கள் உடைய குடும்பத்துடன் உறவுமுறை வைத்துள்ளார்களா என்றால் பொருளாதாரா உறவுமுறை மட்டும் இல்லை, அவர்கள் மடத்திற்கு வர தடை எதுவும் இல்லை.

13. கோவிலூர் மடத்திற்கு கீழ் கோவில்கள் செயல்பட்டு வருகிறதா என்றால் இல்லை. கோவிலூர் மடம் கோவில் கட்டியுள்ளது ஆனால் கோவில் நிர்வாகம் மடத்தின் கீழ் இல்லை. கொற்றவாலிஸ்வரர் கோவிலை கட்டியது கோவிலூர் மடம், அதன் நிர்வகம் சிவகங்கை சமஸ்தாத்திடம் உள்ளது. பொதுவாக மடம் என்றால் இந்து சமய அறநிலை துறை கீழ் தான் வரும் என்றால் இல்லை. இந்து சமய அறநிலை துறை கீழ் இல்லை என்பதற்காக

ஏதாவது Exemption வாங்கியுள்ளார்களா என்றால் உள்ளது. அதற்கான உத்தரவு எந்த ஆண்டு வாங்கப்பட்டது என்றால் ஞாபகம் இல்லை, அந்த உத்தரவு எங்களிடம் உள்ளது. மடாதிபதி நியமனம் தொடர்பான பிரச்சனை ஏற்றப்பட்டால் எவ்வாறு தீர்க்கப்படும் என்றால் 218 வருடங்களாக 14 மடாதிபதிகள் கோவிலூர் மடத்தில் இருந்துள்ளார்கள் அவ்வாறு எந்தவித மான பிரச்சனையும் ஏற்றப்பட்டது இல்லை மற்றும் அந்த பிரச்சனை ஏற்பட்டாலும் இந்த வழக்கிற்கும் அதற்கும் எந்த விதமான சம்மந்தமும் இல்லை.

14. இந்த வழக்கு சொத்தை மேடாக்குவதற்காக மண் போட்டு மேடாக்கியுள்ளோமா என்றால் சமீபத்தில் அவ்வாறு நாங்கள் எதுவும் செய்யவில்லை. வழக்கு சொத்து மேடாக்கியது பற்றி எனக்கு எதாவது நேரடியாக தெரியும் என்றால் தெரியாது, 1 வருடகாலமான அப்படி எதுவும் செய்யவில்லை. நான் கோவிலூர் மடத்திற்கு கணக்கு பார்த்தப்போதும் அப்படி வழக்கு சொத்தை மோடாக்குவது குறித்து எதுவும் பார்த்தது இல்லை.

**சாட்சி விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

sd/-S.Suganiya Sri,
Additional District Munsif
Chidambaram.